## December 27, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மியான்மர் பொதுத் தேர்தலின் முதல்கட்ட வாக்குப்பதிவு ஞாயிற்றுக்கிழமை (டிச.28) நடைபெறவுள்ளது.
   i. கடந்த 5 ஆண்டுகளில் அங்கு நடைபெறும் முதல் தேர்தல் இதுவாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் மூன்று கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும். முதல் கட்டம் ஞாயிற்றுக்கிழமை, இரண்டாவது கட்டம் ஜனவரி 11, மூன்றாவது கட்டம் ஜனவரி 25-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
   ii. இருந்தாலும், 2021-இல் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு நடைபெறும் இந்தத் தேர்தல், நாட்டின் ஜனநாயகத்தை மீட்டெடுக்காது என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.
   iii. கடந்த 2021-இல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங் சான் சூகியின் அரசை ராணுவம் கவிழ்த்தது. அதற்கு எதிரான போராட்டங்கள் உள்நாட்டுப் போராக மாறியது. இந்தச் சூழலில் நடைபெறவிருக்கும் இந்தத் தேர்தல் சுதந்திரமானதும் நியாயமானதும் அல்ல என்று எதிர்க்கட்சிகளும் மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டுகின்றன.
   iv. அதற்கேற்ப, ராணுவத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்ட யூனியன் சாலிடாரிட்டி அண்ட் டெவலப்மெண்ட் பார்ட்டி (யூஎஸ்டிபி) பெருவெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   v. ஆசிய நாடுகள் கூட்டமைப்பை (ஆசியான்) திருப்திப்படுத்தவும், மியான்மர் ராணுவ அரசுக்கு அண்டை நாடுகளான இந்தியா,சீனா, தாய்லாந்து ஆகியவை அளித்துவரும் ஆதரவை நியாயப்படுத்தவும் இந்தத் தேர்தல் நடத்தப்படுவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

2. தங்கள் நிலைகளில் சவூதி அரேபியா வான்வழித் தாக்குதல் நடத்தியதாக யேமன் பிரிவினைவாத ஆயுதக் குழுவான தெற்கு இடைக்கால கவுன்சில் (எஸ்டிசி) தெரிவித்துள்ளது.
   i. அந்த நாட்டின் ஹத்ரமவுத் மற்றும் மஹ்ரா மாகாணங்களில் இருந்து எஸ்டிசி படையினர் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்ட மறுநாளே சவூதி அரேபியா இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.
   ii. ஈரான் ஆதரவுடன் ஹூதி கிளர்ச்சியாளர்கள் தலைநகர் சனா உள்ளிட்ட யேமனின் கணிசமான பகுதிகளை கடந்த 2014– ஆம் ஆண்டு கைப்பற்றினர். அதையடுத்து, சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசுப்படை, எஸ்டிசி படையுடன் இணைந்து ஹூதிக்களுக்கு எதிரான போரை சவூதி அரேபியா 2015-இல் தொடங்கியது. இதனால் யேமனின் தெற்குப் பகுதியை சவூதி ஆதரவு அரசுப்படை தொடர்ந்து கட்டுக்குள் வைத்திருந்தது.
   iii. இருந்தாலும், அரசுப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த ஹத்ரமவுத், மஹ்ரா மாகாணங்களை எஸ்டிசி படையினர் அண்மையில் கைப்பற்றினர். அந்த மாகாணங்களில் இருந்து அவர்கள் வெளியேற வேண்டும் என்று சவூதி அரேபியா உத்தரவிட்டது. அதன் தொடர்ச்சியாக, எஸ்டிசி படையினர் மீது சவூதி விமானங்கள் தற்போது தாக்குதல் நடத்தியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
   iv. கடந்த 1967 முதல் தெற்கு யேமன் தனிநாடாக இருந்த நிலையில்,1990-ஆம் ஆண்டு அது யேமனுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. இருந்தாலும், ஐக்கிய அரபு அமீரக ஆதரவுடன் எஸ்டிசி பிரிவினைவாதக் குழுவினர் தனி தெற்கு யேமன் நாடு கோரி போரிட்டுவருகின்றனர்.

3. மூலிகைகள் மற்றும் செடிகளில் இருந்து எடுக்கப்படும் சாறுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களுக்கு தேநீர் (டீ) எனப் பெயரிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் (எஃப்எஸ்எஸ்ஏஐ) எச்சரித்துள்ளது.

   i. தேயிலைச் செடியிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுக்கப்படும் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதே தேநீர் எனவும் எஃப்எஸ்எஸ்ஏஐ தெரிவித்தது. இதுகுறித்து எஃப்எஸ்எஸ்ஏஐ கடந்த புதன்கிழமை (டிச. 23) வெளியிட்ட உத்தரவில் 'ரூயிபோஸ் தேநீர்', 'மூலிகை தேநீர்' மற்றும் 'ஃப்ளவர் தேநீர்' என உணவு வணிகத்தில் ஈடுபடும் சிலர் பெயரிடுவது கவனத்தில் கொள்ளப்பட்டது.

   ii. தேயிலைச் செடியில் (கேமிலியா சினென்சிஸ்) இருந்து பொருள்களை எடுத்து மேற்கொள்ளப்படும் பானங்களில் மட்டுமே தேநீர் என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும்.

   iii. தேயிலைச் செடியில் இருந்து எவ்வித பொருள்களையும் பயன்படுத்தாமல், மூலிகைகள் மற்றும் பிற செடிகளில் இருந்து எடுக்கப்படும் சாறுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பானங்கள் மற்றும் பொருள்களில் தேநீர் என அச்சிட்டு விளம்பரப்படுத்தக் கூடாது.

   iv. இதை மீறும் நிறுவனங்கள் மீது உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம், 2006-இன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

   v. இதுபோன்ற உணவுகளை உற்பத்தி, சந்தைப்படுத்துதல், இறக்குமதி மற்றும் இணையவழி விநியோகம் உள்பட எந்தப் பணியில் ஈடுபட்டாலும் அந்த நிறுவனங்கள் மேற்கூறிய உத்தரவை முறையாகப் பின்பற்ற வேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

4. அகர்பத்திகள் தயாரிக்க புதிய தர நிர்ணயத்தை இந்திய தர நிர்ணய ஆணையம் (பிஐஎஸ்) அறிமுகப்படுத்தியுள்ளது.

   i. உலகிலேயே இந்தியாவில்தான் அதிக அளவில் அகர்பத்தி தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நடைபெறுகிறது.

   ii. அகர்பத்திக்கான தேவை அதிகரித்துவரும் நிலையில், அதில் தடை செய்யப்பட்ட, உடல்நலனைப் பாதிக்கும் ரசாயனங்களைச் சேர்ப்பதும் அதிகம் நிகழ்வதாகப் புகார்கள் எழுந்தது. இதையடுத்து, நுகர்வோர் நலன், பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு இந்திய தர நிர்ணய ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

   iii. இந்தத்தரத்தைப் பின்பற்றி தயாரிக்கப்படும் அகர்பத்திகளைப் பயன்படுத்தும் இடங்களில் காற்றின் தரம் பாதிக்கப்படாது, சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாது, சர்வதேச அளவில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட சில செயற்கை நறுமணப் பொருள்கள், வேதிப்பொருள்கள் அதில் இடம் பெறாது.

   iv. பிஐஎஸ் அறிவித்துள்ள தரத்தைப் பின்பற்றி தயாரிக்கப்படும் அகர்பத்திகளுக்கு 'ஐஎஸ் 19412:2025' என்ற குறியீடு வழங்கப்படும். இதன்மூலம் பொது மக்கள் அதன் தரத்தைத் தெரிந்துகொண்டு பயன்படுத்தலாம் என்று நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

   v. அலித்ரீன், பெர்மெத்ரீன், சைபர்மெத்ரீன், டெல்டாமெத் ரீன், ஃபிரோனில் ஆகியவற்றை வேதிப்பொருள்களை அகர்பத்திகளில் பயன்படுத்தக்கூடாது. மேலும், செயற்கை

நறுமணங்களான பென்சைல் சயனைடு, எத்தில் அக்ரிலேட், டைபினைலமைன் உள்ளிட்டவற்றை சேர்க்கக் கூடாது.

vi. புதிய தர நிர்ணயத்தின்படி அகர்பத்திகள் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டவை, கைகளால் தயாரிக்கப்பட்டவை, பராம்பரிய முறையில் தயாரிக்கப்பட்டவை என வகைப்படுத்தப்படுகின்றன.

vii. இந்திய அகர்பத்தி சந்தையின் ஆண்டு மதிப்பு ரூ.8,000 கோடியாக உள்ளது. இதுதவிர அமெரிக்கா, மலேசியா, நைஜீரியா, பிரேஸில், மெக்ஸிகோ உள்ளிட்ட 150 நாடுகளுக்கு ஆண்டுதோறும் ரூ.1,200 கோடிக்கு அகர்பத்தி ஏற்றுமதியாகிறது. குடிசைத் தொழிலில் தொடங்கி குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள், சில பெரு நிறுவனங்களும் அகர்பத்தி தயாரிப்பில் உள்ளன.

viii. பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளிப்பதிலும் அக்ர் பத்தி தயாரிப்பு முன்னிலை வகிக்கிறது. பாரம்பரிய கைவினைக் கலைஞர்களும் இத்துறை சார்ந்த பணிகளில் அதிகம் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

5. கர்நாடக மாநிலத்தின் கார்வார் துறைமுகத்தில் இருந்து நீர் மூழ்கிக் கப்பலில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஞாயிற்றுக்கிழமை (டிச.28) பயணிக்கவுள்ளார்.

i. கோவா, கர்நாடகம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களுக்கான 4 நாள்கள் பயணத்தின் ஒரு பகுதியாக இந்த நீர் மூழ்கிக் கப்பல் பயணம் இடம்பெறுகிறது என்று குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவாவுக்கு சனிக்கிழமை (டிச.27) செல்லும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, மறுநாள் கர்நாடக மாநிலம், கார்வார் துறைமுகத்தில் இருந்து நீர் மூழ்கிக் கப்பலில் பயணிக்கவுள்ளார்.

ii. ஜார்க்கண்ட் மாநிலம், ஜாம்ஷெட்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிலையத்தின் 15-ஆவது பட்டமளிப்பு விழாவில் டிச.28-இல் பங்கேற்கும் அவர், மறுநாள் கும்லாவில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வார் என்று குடியரசுத் தலைவர் மாளிகை தெரிவித்துள்ளது.

iii. 'மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம், கடந்த 2006, பிப்.13-இல் ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் மேற்கொண்டார். அவருக்குப் பிறகு நீர்மூழ்கியில் பயணிக்கும் நாட்டின் இரண்டாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமை திரௌபதி முர்முக்கு கிடைக்கவுள்ளது.

iv. தனது பதவிக் காலத்தில் விமானப் படையின் இரு போர் விமானங்களில் பயணித்த முதல் குடியரசுத் தலைவர் என்ற சிறப்புக்குரியவர் முர்மு. கடந்த 2023-இல்சுகோய் 30 எம்கேஐ, கடந்த அக்டோபரில் ரஃபேல் என இரு போர்விமானப் பயணங்களை அவர் மேற்கொண்டார்.

6. முகலாய ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய மதத்துக்கு மாற மறுத்து மரணத்தைத் தழுவிய சீக்கியர்களின் 10-ஆவது குருவான குரு கோவிந்த் சிங்கின் மகன்கள் ஜோராவர் சிங், ஃ பதே சிங் ஆகியோரின் தியாகத்தைப் போற்றும் நோக்கில், கடந்த 2022- இல் இருந்து டிச.26-ஆம் தேதி வீர பாலகர் தினமாக (வீர பால திவஸ்) கடைப்பிடிக்கப்படுகிறது.

7. தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை அருங்காட்சியகத்தில் 17-ஆம் நூற்றாண்டின் போர்வாள் மாயமானது குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

i. மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில், கி.பி.1620- ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டினர் டேனிஷ் கலை நுணுக்கத்துடன் கோட்டை கட்டினர்.